DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC. No. 714 / 2025 |
| Deposition of witness | : | P.W – 1 |
| Name | : | ரவீந்தர் |
| Father's /Husband Name | : | ராஜேந்திரன் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 36 |
| Occupation | : | தலைமைக்காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 19th day February 2026.
Accused present.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது நன்னிலம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.03.2024–ம் தேதி 20.00 மணிக்கு பேரளம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் சரவணபவகுமார் அவர் தலைமையில் இரண்டாம்நிலைக்காவலர் 334 ராம்குமார் மற்றும் நானும் பார்டி சகிதம் பேரளம் காவல் சரகம் கொல்லுமாங்குடி பகுதியில் பகுதியில் தேர்தல் பாதுகாப்பு அலுவலாக தேர்தல் தொடர்பான குற்றங்கள் சம்பந்தமாக கண்காணித்து வந்த போது கொல்லுமாங்குடி கடை வீதியில் எவ்வித அரசு அனுமதி இன்றி தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும் காலகட்டத்தில் தேர்தல் நடத்தை விதிகளை மீறி அ.இ.அ.தி.மு.க. கட்சியின் கொடிகள் நடப்பட்டிருந்தது. இது பற்றி விசாரணை செய்ததில் அந்த கட்சியின் ஊராட்சி மன்ற தலைவரான நடராஜன் மகன் ராஜா என்பவர் அந்த கட்சிக்கு ஆதரவாக கட்சியின் கொடிகம்பங்களை நட்டு வைத்திருந்ததாக விசாரணயில் தெரியவந்தது. எனவே, தேர்தல் நடத்தை விதிகளை மீறி பொதுஅழகை சீர்குலைக்கும் வகையில் எவ்வித அரசு அனுமதியின்றி அ.இ.அ.தி.மு.க. கட்சியின் கொடிகம்பங்கள் நட்டு வந்திருந்த இவ்வழக்கின் எதிரியான ராஜா த/பெ. நடராஜன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி நிலையம் வந்து எதிரி மீது பேரளம் காவல் நிலைய குற்ற எண். 184 / 2024 சட்டப்பிரிவு 4 (1) தமிழ்நாடு திறந்த வெளி அழகை கெடுத்தல் தடை சட்டத்தின்படி உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். அதற்கு நாங்கள் உதவியாக

இருந்தோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No. 714 / 2025 |
| Deposition of witness | : | P.W. – 2 |
| Name | : | சரவணபவகுமார் |
| Father's /Husband Name | : | ராஜன் |
| Village | : | பேரளம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 58 |
| Occupation | : | காவல் உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 19th day February, 2026.
Accused present.

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது பேரளம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அவர் கடந்த 31.03.2024–ம் தேதி 20.00 மணியளவில் பேரளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நான் பணியில் இருந்தபோது பேரளம் சரகத்திற்குட்பட்ட பகுதிகளில் தேர்தல் தொடர்பான குற்றங்கள் சம்பந்தமாக முதல்நிலைக்காவலர் ரவீந்தர் இரண்டாம் நிலைக்காவலர் ராம்குமார் ஆகியோருடன் ரோந்து பணியில் கண்காணித்து வந்தபோது கொல்லுமாங்குடி கடை வீதியில் எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இன்றி தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும் காலக்கட்டத்தில் விதிகளை மீறி அ.இ.அ.தி.மு.க கட்சி கொடி மரங்கள் நட்டு வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. இது பற்றி விசாரணை செய்ததில் அ.இ.அ.தி.மு.க கட்சியின் ஊராட்சிமன்ற தலைவரான நடராஜன் மகன் ராஜா என்பவர் தான் சார்ந்திருக்கும் கட்சிக்கு ஆதரவாக கட்சியின் கொடிகம்பங்களை நட்டு வைத்திருந்தது தெரியவந்ததால் எதிரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி நிலையம் வந்து எதிரி மீது பேரளம் காவல் நிலைய குற்ற எண். 184 / 2024 சட்டப்பிரிவு 4 (1) தமிழ்நாடு திறந்த வெளி அழகை கெடுத்தல் தடை சட்டத்தின்படி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்துள்ளார். அதற்கான முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகள் ரவீந்தர், ராம்குமார் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். இத்துடன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற அறிக்கை

**நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

**இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.